005097

2 , SEP 2020

**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி - அரசு தகவல் தொகுப்பு விவர மையம் – கருணை அடிப்படையில் பணிநியமனம் - (திரு).ஐ.ராஜா, அலுவலக உதவியாளர் (08.04.2014) பணியிடை இறப்பு - அவரது வாரிசான திரு.ரா.பிரித்திவிராஜ் என்பவருக்கு 23.07.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் - பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நிதி (கூட்டுறவுத் தணிக்கை)த் துறை

அரசாணை (நிலை) எண்.337

நாள்:12.09.2020,
சார்வரி, ஆவணி - 27,
திருவள்ளுவர் ஆண்டு - 2051.

படிக்கப்பட்டது:

1. அரசு தகவல் தொகுப்பு விவர மையம், முதன்மைச் செயலர்/ஆணையர்((மு.கூ.பொ), செயல்முறை ஆணை எண்.3076/அ1/2018, நாள் 20.07.2018.
2. அரசாணை(நிலை)எண்.100. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்(எம்) துறை நாள் 01.08.2018.
3. அரசு தகவல் தொகுப்பு விவர மையம், முதன்மைச் செயலர்/ஆணையர்((மு.கூ.பொ), அவர்களின் கடித ந.க.எண்.5331/அ1/2019, நாள் 25.09.2019 மற்றும் 30.10.2019.
4. அரசாணை(நிலை)எண்.18. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு(க்யூ-1)த் துறை நாள் 23.01.2020.

............

**ஆணை:-**

அரசு தகவல் தொகுப்பு விவர மையம், முதன்மைச் செயலர்/ஆணையர்((மு.கூ.பொ), அவர்கள் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தில் பணிபுரிந்து வந்தபோது பணியிடைக் காலத்தில் 08.04.2014 அன்று இயற்கை எய்திய, திரு.ஐ.ராஜா அவர்களுடைய வாரிசான அவரது மகன் திரு.ரா.பிரித்திவிராஜ் என்பவருக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின் வழி, கருணை

அடிப்படையில், அரசு தகவல் தொகுப்பு விவர மைய கட்டுப்பாட்டில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு, தனியர் 23.07.2018 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றார் என்றும், எனவே, தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 23.07.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. திரு.ரா.பிரித்திவிராஜ் 05.02.1997 அன்று பிறந்துள்ளார். தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியான 10-ஆம் வகுப்பு தேர்வில் தேர்ச்சிப் பெற்றுள்ளார். கருணை அடிப்படையில் பணிநியமனம் தொடர்பான அனைத்து விதிகள்/ நிபந்தனைகளையும் நிறைவு செய்துள்ளார்.

3. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், அரசு தகவல் தொகுப்பு விவர மையம், முதன்மைச் செயலர்/ஆணையரின்(மு.கூ.பொ), கருத்துருவினை ஏற்று, கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், அரசு தகவல் தொகுப்பு விவர மைய கட்டுப்பாட்டில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.ரா.பிரித்திவிராஜ் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 23.07.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இதனால் எழக்கூடிய நிலுவைப் பணப்பயன்களை பெறத் தனியர் தகுதியுடையவர் ஆகிறார். தனியர், இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணி நியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டுமென்பதை உறுதிசெய்யுமாறு அரசு தகவல் தொகுப்பு விவர மையம், முதன்மைச் செயலர்/ஆணையர்(மு.கூ.பொ), அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.11123/க்யூ.1/2020-1, நாள்:09.09.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.21840/ஜி2/2020-1, நாள்:11.09.2020 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.கிருஷ்ணன்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர் :
முதன்மைச் செயலர்/ஆணையர்(மு.கூ.பொ), அரசு தகவல் தொகுப்பு விவர மையம் சென்னை-25.

(பணிப்பதிவேடு மற்றும் அசல் சான்றிதழ்களுடன்)
திரு.ரா.பிரித்திவிராஜ், இளநிலை உதவியாளர் (ஆணையர் ((மு.கூ.பொ)
மூலமாக)

நகல் :
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (க்யூ-1)த் துறை, சென்னை-09
பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்த (ஜி-2)த் துறை, சென்னை-09.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

14/09/2020

பிரிவு அலுவலர்.

M.K
14.9.2020